## காணமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் கிளிநொச்சியில் கவனயீர்ப்புப் போராட்டம்




கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் இன்று காலை கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுக்கான அலுவலகம் முன்பாக போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தின்போது, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்களையும், சர்வதேசத்திடம் நீதி கோரிய பதாதைகளையும் மக்கள் ஏந்தியிருந்தனர்.

2,383 ஆவது நாளாக தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வரும் உறவுகள், ஒவ்வொரு மாத இறுதியிலும் கவனயீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## செப்டெம்பருக்குள் இலங்கை மீளும்! ஜனாதிபதி நம்பிக்கை தெரிவிப்பு

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்குள் இலங்கை வங்குரோத்து நிலையில் இருந்து மீளும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பிற்கான அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு அனைத்துத் தரப்பினரதும் ஆதரவையு எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைப் பணிப்பாளர் நிறுவகத்தில் (SLID) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.


# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆனி 16 வெள்ளிக்கிழமை 30.06.2023 கதிர் 15



செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட

காலைக்கதிர் TV YouTube தளம்


# உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு விவாதம் நாளை நாடாளுமன்றில் நடைபெறவுள்ளது

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானம்

**உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு வேலைத் திட்டம் குறித்த விவாதம் நாளை சனிக்கிழமை காலை 9.30 முதல் மாலை 7.30 வரை நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது. இன்று நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.**

**ஏனவே, ஞாயிற்றுக்கிழமை நாடாளுமன்ற அமர்வு இடம்பெறாது எனவும், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் மீதான வாக்கெடுப்பானது, விவாதங்களைத் தொடர்ந்து இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இதேவேளை, நாடாளுமன்ற அமர்வுகளை அடுத்த வாரத்தில் மூன்று நாட்களுக்கு மட்டுப்படுத்தவும் நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழு இன்று தீர்மானித்துள்ளது. இதன்படி, எதிர்வரும் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடாது என்றும் அன்றைய தினம் நடத்தத் திட்டமிடப்பட்ட விடயங்கள் எதிர்வரும் 7ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.**

**நாடாளுமன்ற விவகாரங்களுக்கான குழு இன்று பிற்பகல் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடிய போதே இந்தத் தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.**



## உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு பொது நிதி தொடர்பான நாடாளுமன்றக் குழு அனுமதி

அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கு பொது நிதி தொடர்பான நாடாளுமன்றக் குழு அனுமதி வழங்கியுள்ளது.

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள பிரேரணையைப் பரிசீலிப்பதற்காக, நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தலைமையில் இரண்டு நாட்கள் கூடிய இந்தக் குழு, நீண்ட ஆலோசனைகளைத் தொடர்ந்து, மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் அதிகாரிகளிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்ற பின்னர், இன்று இதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இதனை அதன் உறுப்பினரும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ரஞ்சித் பண்டார தெரிவித்துள்ளார்.

இதன்படி, அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் நாளை சனிக்கிழமை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இந்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு நாளை இரவு 7.30 க்கு இடம்பெறவுள்ளது.

## சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடுவதை தனியார் நிறுவனத்துக்கு வழங்க யோசனை

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தின் கணினி அமைப்புக்குப் பொறுப்பான நிறுவனம், சாரதி அனுமதிப் பத்திர அட்டைகளை அச்சிடும் இயந்திரங்களைப் பெற்று, பத்திரமொன்றுக்கு 150 ரூபா அறவிடும் நடைமுறையுடன் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கு அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்ளதாக திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கு போதியளவிலான இயந்திரங்கள் இன்மையால் பல இலட்சம் அதிகமான சாரதி அனுமதிப் பத்திர அட்டைகள் பலமாதங்களாக வழங்கப்படாதுள்ளதுடன், ஜூன் 19 ஆம் திகதி முதல் வழங்கப்பட்டிருக்கம் தற்காலிக சாரதி அனுமதிப் பத்திர காலம் மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கப்படுவதாகவும் மோட்டார்

2➤

## உள்நாட்டுக் கடன் விடயத்தை கவனத்தில் கொள்ளாது வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு சாத்தியப்படாது!

### நிதிச் செயலாளர் மகிந்த சிறிவர்தன சுட்டிக்காட்டு

உள்நாட்டுக் கடனை மறுசீரமைக்காமல் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு சாத்தியப்படாது என நிதிச் செயலாளர் மகிந்த சிறிவர்தன தெரிவித்துள்ளார். உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் தொடர்பான விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலே நிதிச் செயலாளர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.



வங்கி முறை மற்றும்

2➤

## கொக்குத்தொடுவாயில் மனித எச்சங்கள் பெண் போராளிகளுடையன என சந்தேகம்



முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்திய பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பினை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தினைத் தோண்டியபோது, நிலத்தில் புதைக்கப்பட்ட மனித எச்சங்கள் கிடைத்துள்ளன.

பெண்களின் மேலாடை, பச்சைச் சீருடை மற்றும் எலும்பு எச்சங்கள் என்பன இதன்போது இனங்காணப்பட்டுள்ளன.

அவை பெண் போராளிகளுக்குரியவையாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றன.

கொக்கிளாய் பொலிஸாருக்கு இது குறித்துத் தகவல் கொடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையிலிருந்து வெளிவரும் ஒரேயொரு மாலை இதழ்

# 12 ஆவது 'இந்துக்களின் பெருஞ்சமர்' இன்று ஆரம்பம்

யாழ். இந்துக் கல்லூரிக்கும் கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் இடையிலான 12 ஆவது 'இந்துக்களின் பெருஞ்சமர்' இரண்டு நாள் கிரிக்கெட் போட்டி பி. சரவணமுத்து ஓவல் சர்வதேச விளையாட்டரங்கில் இன்று ஆரம்பமாகியுள்ளது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொழும்பு இந்து கல்லூரி அணி முதலில் களத்தடுப்பை தெரிவு செய்துள்ளது.

அதன்படி, யாழ். இந்துக் கல்லூரி அணி முதலில் துடுப்பெடுத்தாடி, முதல் இன்னிங்சுக்காக 183 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது. பரேஸ் ஸித் 80 ஓட்டங்களைப் பெற்றார். பதிலளித்துக் களமிறங்கிய கொழும்பு இந்துக் கல்லூரி அணி முதல் இன்னிங்சில் தனது அனைத்து விக்கெட்டுகளையும் 49 ஓட்டங்களுக்கு இழந்தது. யாழ் இந்துவின் கஜநாத் 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

போலோ ஒன் அடிப்படையில் மீண்டும் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட கொழும்பு இந்து அணி முதல் நாள் ஆட்ட முடிவின்போது விக்கெட் இழப்பின்றி 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்த இரண்டு கல்லூரிகளுக்கும் இடையிலான 'இந்துக்களின் பெருஞ்சமர்' 1981இல் ஆரம்பமாகி 1982 இலும் நடத்தப்பட்டது. 1983இல் ஏற்பட்ட அமைதியின்மை காரணமாக அது தடைப்பட்டது. 12 வருடங்களில் பின்னர் 2005இல் 40 ஓவர் கிரிக்கெட் போட்டி நடத்தப்பட்டு 'இந்துக்களின் பெருஞ்சமரு'க்கு மீண்டும் உயிர்கொடுக்கப்பட்டது.




அதன் பின்னர் போக்குவரத்துப் பிரச்சினைகள் காரணமாக மீண்டும் இந்துக்களின் சமர் கைவிடப்பட்டு, சில வருடங்களின் பின்னர், 2013 இல் கொழும்பில் நடத்தப்பட்ட போட்டியோடு ஆரம்பமாகி, 2019 வரை யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் மாறிமாறி நடத்தப்பட்டது.

2019 இல் பி. சரவணமுத்து ஓவல் சர்வதேச விளையாட்டரங்கில் போட்டி நடைபெற்றதோடு, கொரோனாத் தொற்று, பொருளாதார நெருக்கடி, போராட்டம் ஆகியன காரணமாக மீண்டும் தடைப்பட்ட இப்போட்டி, கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டது.

# உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் மைதானம் மைத்திரிபால சிறிசேனவால் கையளிப்பு



3.2 மில்லியன் ரூபாய் செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட உடுப்பிட்டி மகளிர் கல்லூரியின் மைதானம் இன்று வியாழக்கிழமை முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவால் திறந்து வைக்கப்பட்டு, மாணவர்களிடம் கையளிக்கப்பட்டது. பாடசாலை மாணவர்களுடனான கலந்துரையாடல் நிகழ்விலும் மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டார்.

நாடு முழுவதும் அனைத்து கல்வி வலயங்களையும் உள்ளடக்கிய 100 பாடசாலை விளையாட்டு மைதானங்களை அபிவிருத்தி செய்வதற்கான வேலைத்திட்டத்தின் கீழ், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் முன்மொழிவில், 3.2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மைதானம் புனரமைப்பு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், பாடசாலை அதிபர் இராஜலட்சுமி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சர்வதேச விவகாரங்களுக்கான உதவிச் செயலாளர் சஜின் டி வாஸ் குணவர்தன, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பேராசிரியர் சமில லியனகே, நாடாளுமன்ற உறுப்பினர் சாரதி துஷ்மந்த மித்ரபால, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொலனறுவை மேற்கு அமைப்பாளர் தஹாம் சிறிசேன, பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணத்துக்கான 3 நாள் விஜயம் மேற்கொண்டுள்ள மைத்திரிபால சிறிசேன, பல்வேறுபட்ட சமூக மட்ட நிகழ்வுகளிலும், மக்கள் சந்திப்புகளிலும் கலந்து கொண்டுள்ளார்.

## உள்நாட்டுக் கடன் விடயத்தை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி இரண்டையும் பாதுகாப்பதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளிப்பதாகவும், சர்வதேச நாணய நிதியத்துடன் ஒரு வேலைத் திட்டத்தில் இலங்கை பிரவேசித்துள்ள நிலையில், கடன் மறுசீரமைப்பைத் தொடரத் தவறினால் இந்தத் திட்டத்தில் பின்விளைவுகள் ஏற்படும், என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மறுசீரமைப்பு, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை உள்ளடக்கியது. வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போதிலும், உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை உரிய காலத்தில் நிறைவு செய்வதற்கு முன்னுரிமை அளிப்பதற்கும் கணிசமான முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது, எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய நிலைமை குறித்து பொது மக்களுக்கு அறிவூட்டவும், தகவல்களைத் தெரிவிக்கவும் நடவடிக்கை எடுப்பதன் முக்கியத்துவத்தையும் அவர் தெளிவுபடுத்தினார்.

இதன்போது வங்கி அமைப்பின் சாத்தியமான சரிவு மற்றும் நாட்டில் ஏற்படும் பாதகமான தாக்கம் பற்றிய கவலைகள் உட்பட பல கேள்விகள் எழுப்பப்படுகின்றன. நாடு இன்னும் தீர்க்கப்படாத குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொண்டுள்ளதால், இது தனிப்பட்ட முறையில் எனக்கு ஒரு துயரமான சூழ்நிலையாகும். இந்தச் சவால்களைச் சமாளிக்க உதவும் திட்டங்களைச் செயல்படுத்துவது மிகவும் அவசியம் எனவும், அவர் தெரிவித்துள்ளார்.

# சிறுவர் நாடகத் திருவிழா இன்றும் நாளையும் நல்லூரில்

யாழ்ப்பாணம் செயல் திறன் அரங்க இயக்கமும் இலங்கை, இந்திய கலை இலக்கிய அமைப்பான முற்றமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள சிறுவர் நாடகத் திருவிழா இன்றும் நாளையும் நல்லூரில் உள்ள முற்றம் அரங்கத்தில் இடம்பெறவுள்ளது.

மாலை 6.30 மணியளவில் தொடங்கும் நிகழ்வில் நாளொன்றுக்கு இரண்டு நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன என்று செயல் திறன் அரங்க இயக்க நிறுவுனர் தே.தேவானந்த் தெரிவித்தார்.

இரு நாள் நிகழ்வில் (அ)சிங்கம், முயலார் முயல்கிறார் மற்றும் கூடி விளையாடு பாப்பா ஆகிய மூன்று நாடகங்கள் மேடையேறவுள்ளன.

இன்று (அ)சிங்கம் மற்றும் கூடிவிளையாடு பாப்பா ஆகிய நாடகங்கள் மேடையேற்றப்படவுள்ளன. மாலை 7.10 க்கு முதல் நாடகத்தின் அரங்கேற்றமும், தொடர்ந்து 7.45 க்கு இரண்டாவது நாடகமும் மேடையேறும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

சிறுவர்களுக்கு உள ஊக்கத்தையும், செயற்பாட்டுத் திறனையும் அதிகரிக்கக்கூடிய வகையிலான அரங்கச் செயற்பாடுகள் நாடகங்கள் தொடங்குவதற்கு முன்னரும் நாடகங்கள் முடிந்த பின்னரும் இடம்பெறும் என்பதால், பார்வையாளர்களான பிள்ளைகளை மாலை 6.30 க்கே அரங்கிற்கு அழைத்து வருவது சிறந்தது என்று செயல்திறன் அரங்க இயக்க நிறுவுனர் அழைப்பு விடுத்துள்ளார்.

செயல்திறன் அரங்க இயக்கம் கடந்த 20 ஆண்டுகளாக யாழ்ப்பாணத்தில் அரங்கச் செயற்பாடுகளில் தீவிரமாக இயங்கிவரும் ஓர் அமைப்பாகும். குறிப்பாக, இது சிறுவர் அரங்கத்தில் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றது.

அரங்கை சிறுவரின் உளவிருத்திக்காகப் பயன்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு, தனது செயற்றிட்டங்களை வடிவமைத்துச் செயற்படுத்தி வருகின்றது. வருடாந்தம் நல்லூர் உற்சவ காலங்களில் நல்லூர் நாடகத் திருவிழா என்ற நிகழ்வைப் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடந்தி வந்தது. கொரோனாப் பெருந்தொற்றைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் நிறுத்தப்பட்ட நிலையில் மீண்டும் இந்த சிறுவர் நடாகத் திருவிழாவின் ஊடாக தனது அரங்கப் பயணத்தைத் அது தீவிரப்படுத்தியிருக்கின்றது.

## சாரதி அனுமதிப் பத்திரங்கள் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சாரதி அனுமதிப்பத்திரங்களை அச்சிடுவதற்கான அட்டைகள் பற்றாக்குறையாகவுள்ளதால் ஆறு மாதங்களுக்கும் மேலாக சுமார் 8 இலட்சத்துக்கும் அதிகமான சாரதி அனுமதிப் பத்திரங்கள் அச்சிடப்படாமலுள்ளன. அந்தச் சாரதி அனுமதிப் பத்திர அட்டைகள் தனியார் துறையிடம் அச்சிடுவதற்கு வழங்கும் யோசனை அமைச்சரவையின் அனுமதிக்காக சமர்ப்பிக் கப்பட்டுள்ளது, மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்துள்ளார்

சாரதி அனுமதிப் பத்திரங்களை அச்சிடுவதற்கான புதிய அச்சு இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்காக சுமார் 20 கோடி ரூபா செலவிடவேண்டியுள்ளது என திணைக்களத் தகவல்கள் கூறுகின்றன.

# லங்கா சதொச நிறுவனத்தில் அரிசியின் விலை குறைப்பு

லங்கா சதொச நிறுவனம் 3 வகையான அரிசிகளின் விலைகளை இன்று முதல் குறைத்துள்ளது.

இதன்படி, ஒரு கிலோ வெள்ளை அரிசியின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 165 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஒரு கிலோ வெள்ளை நாட்டு அரிசி 7 ரூபாவினால் குறைக்கப்பட்டு, தற்போதைய விலை 168 ரூபாவாகவும், ஒரு கிலோ சிவப்பு அரிசி இரண்டு ரூபாவினால் குறைக்கப்பட்டு புதிய விலை 135 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட - maalaikkathir@gmail.com

# யாழ் பிராந்தியத்தில் கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் சிறுவர் மீதான வன்முறைகள் இந்த வருடத்தில் அதிகரிப்பு!



யாழ்ப்பாணப் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் கடந்த வருடத்தைவிட இவ்வருடம் அதிகரித்துள்ளதாக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் ஜனவரி முதல் டிசம்பர் மாதம் வரை பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் யாழ்ப்பாணம், சுன்னாகம், மானிப்பாய், பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் 6 முறைப்பாடுகளும், சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 53 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றிருந்தன.

எனினும், இந்த வருடம் ஜனவரி மாதம் முதல் கடந்த மே மாத இறுதி வரை பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 4 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

யாழ்ப்பாணம் - 6, சுன்னாகம் - 14, மானிப்பாய் - 4, கோப்பாய் - 6, கொடிகாமம் - 3 , சாவகச்சேரி - 6 , வட்டுக்கோட்டை - 5, ஊர்காவற்துறை - 7 என குறித்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்படி எண்ணிக்கையில் முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன.

18 வயதுக்குட்பட்டோரை அச்சுறுத்தல், துன்புறுத்துதல், காயப்படுத்துதல், மிரட்டுதல், சித்திரவதைக்குட்படுத்துதல், உள ரீதியான பாதிப்புகளை ஏற்படுத்தல், பாலியல் ரீதியாகத் துன்புறுத்தல், பாலியல் ரீதியான தொல்லை, போன்ற வன்முறை சம்பவங்கள் வீடுகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டமை தொடர்பிலாக இந்த 53 முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரத் தகவல்கள் தெரிவிக்கின்றன,

கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுடன் தொடர்புடையோர் உரிய முறையில் விசாரணைக்குட்படுத்தப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு ஆட்படுத்தப்பட்டுள்ளதோடு பலர் நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலிலும் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறுவர்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் தொடர்பான முறைப்பாடுகள் கிடைக்கப்பெறுமிடத்து, குறித்த முறைப்பாடு தொடர்பில் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ய வேண்டும் என்ற சட்ட நியதியின் அடிப்படையில், கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் அனைத்திற்கும் உரிய சட்டக் கோவைக்கு அமைய நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடத்தோடு ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் முதல் அரையாண்டுப் பகுதிக்குள் சிறுவர்களுக்கெதிரான வன்முறை சம்பவங்கள் அதிகரித்த நிலை காணப்படுகின்றது,

யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் வழிகாட்டுதலின்படி, யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பெண்கள் பாடசாலைகளில் வகுப்பு ஆசிரியர்கள், மாணவிகளின் பெற்றோர்களின் தொலைபேசி இலக்கங்களை உள்ளடக்கி, வட்ஸ்அப் குழுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் வரவு மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் குறித்த குழுவில் பகிர்ந்து, மாணவர்களின் பாதுகாப்பு விடயங்களை உறுதிப்படுத்தும் வேலைத் திட்டம் ஒன்றினை பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் பதிவுக் கட்டணங்களை அதிகரிக்கின்றது

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் பதிவுக் கட்டணமும், முகவர் நிலையத்தைப் புதுப்பித்தல் கட்டணமம் அதிகரிக்கப்படவுள்ளன.

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய கட்டணங்கள் நாளை ஜூலை முதலாம் திகதி முதல் அமலுக்கு வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பதிவுக் கட்டணம் 17,928 ரூபாவிலிருந்து 21,467 ரூபாவாகவும், பதிவை புதுப்பிப்பதற்கான கட்டணம் 3,774 ரூபாவிலிருந்து 4,483 ரூபாவாகவும் அதிகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது

# இராணுவ கப்டன் உட்பட இருவர் துப்பாக்கிகளுடன் கைதாகினர்

இலங்கை இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரி உட்பட இருவர் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு சந்தேக நபர்களும் நுவரெலியா, கிரிகோரி ஏரிக்கு அருகில் உள்ள அரச சுற்றுலா விடுதியொன்றில் தங்கியிருந்த நிலையிலேயே கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ரி-56 ரக துப்பாக்க , இரண்டு கைத்துப்பாக்கிகள் அவற்றுக்குரிய தோட்டாக்கள் மற்றும் 167 தோட்டாக்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன. ரி-56 ரக துப்பாக்கியின் இலக்கம் தம்மால் கைப்பற்றப்படும்போது அழிக்கப்பட்டிருந்ததாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட இருவரில் ஒருவர் 39 வயதுடையவர் எனவும் அவர் அதுருகிரிய பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் மற்றைய நபர் இரத்தினபுரி இராணுவ முகாமில் கடமையாற்றும் இராணுவ கப்டன் தர அதிகாரி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மினுவாங்கொடை பிரதேசத்தில் சிறைக்காவலர் ஒருவருடைய வீட்டுக்குச் சென்று துப்பாக்கியை க்காட்டி கொலைமிரட்டல் விடுத்த சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், கொலை மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ள ரி-56 ரக துப்பாக்கி, ஹோமாகம நியந்தகல பிரதேசத்தில் இடம்பெற்ற கொலைச் சம்பவம் ஒன்றில் பயன்படுத்தப்பட்டது எனவும் தெரியவந்துள்ளது. தற்போது வெளிநாட்டில் இருக்கும் போதைப்பொருள் வியாபாரி ஒருவரே அந்தக் கொலையைச் செய்ததாகத் தெரியவந்துள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

துப்பாக்கிகளோடு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் 72 மணிநேரம் விளக்கமறியலில் வைக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

# மன்னார் மறைமாவட்ட ஆயர் மடு பக்தர்களிடம் கோரிக்கை

மடு அன்னையின் ஆடி மாதத் திருவிழா நாட்களில் விடுமுறை அதிகமாகக் காணப்படுவதால், அதிகமான மக்கள் இவ்விழாவில் கலந்து கொள்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மடுத் திருப்பதிக்கு யாத்திரிகர்களாக வருவோர் இங்கு வழிபாடுகள் நடைபெறுகின்ற போது வீடுகளில் அல்லது கூடாரங்களில் இருந்து, பொழுதுபோக்குவதைத் தவிர்த்து வழிபாடுகளில் கலந்து கொண்டு அன்னையின் ஆசீர் பெற்றுக் கொள்ளுங்கள், என மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார்.

மன்னார் மடு அன்னையின் ஆடி மாதத் திருவிழா குறித்து ஊடகங்களுக்கு தகவல் வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விழாவை முன்னிட்டு பல்வேறு பணிகளில் ஈடுபடும் அனைத்துத் திணைக்களங்களினதும் ஒத்துழைப்புகளுக்கு நன்றி கூறி நிற்கின்றேன். உங்கள் ஒத்துழைப்பு இருக்கும்போதுதான் இவ்வாறான பெருவிழாவை சிறப்பாகக் கொண்டாட முடியும். இந்த ஆடி மாதப் பெருவிழாவுக்கு தற்பொழுது அதிகமான பக்தர்கள் வருகிறார்கள்.

கடந்த ஆண்டு எரிபொருள் தட்டுப்பாடு இருந்தமையால் பெரும்பாலான பக்தர்கள் இவ்விழாவுக்கு வருகை தர முடியாத நிலை இருந்தது. ஆனால், இம்முறை இவ்வாறான பிரச்சனைகள் இல்லாதபடியால் பக்தர்கள் கூட்டம் அதிகமாக காணப்படும்.

மடு திருப்பதி வளாகத்துக்குள் யாத்திரிகர்களுக்கு அமைக்கப்பட்டுள்ள 580 வீடுகள் முன்பதிவு செய்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன் பலர் கூடாரங்களை அமைத்துத் தங்கியும் இருக்கின்றனர்.

தற்போதைய நிலையை பார்க்கும்போது மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன் 29 ஆம் திகதியில் இருந்து 3 ஆம் திகதி வரை விடுமுறை தினங்களாக இருப்பதால் அதிகமான சனத்தொகை இவ்விழாவுக்கு வருகை தருவதாக தெரியவருகின்றது.

ஆகவே, இவ் திருவிழாவுக்கான ஒழுங்குகளை சரியான முறையில் ஒழுங்குபடுத்த வேண்டிய அவசியம் உண்டு. அரச மற்றும் ஏனையவர்களின் ஒத்துழைப்பை நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். இதையிட்டு மாவட்ட அரசாங்க அதிபரின் திட்டங்களுக்கு கீழ் யாவரும் சிறப்பான ஒத்துழைப்பு வழங்குவீர்கள் என நினைக்கின்றேன்.

மேலும், மடுத் திருப்பதிக்கு யாத்திரிகர்களாக வருவோர் இங்கு வழிபாடுகள் நடைபெறுகிற போது வீடுகளில் அல்லது கூடாரங்களில் இருந்து உங்கள் பொழுதுகளைப் போக்குவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

பெருவிழாவுக்கு முதல் நாள் அதாவது ஆடி மாதம் முதலாம் திகதி மாலை ஆராதனை 6 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமாகும். இதன்பின் திவ்விய நற்கருணை ஆராதனையுடன் பவனியும் ஆசீரும் இடம்பெறும்.

2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பெருவிழாவன்று காலை 5 மணிக்கு முதல் திருப்பலியும், இதைத் தொடர்ந்து 6.15 க்கு ஆயர்களின் தலைமையில் திருவிழாத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படும்.

இதைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சுரூப பவனியும் ஆசீரும் இடம்பெறும், என மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்தார்.

# ரஷ்ய குடியுரிமை பெற்ற தொழிலதிபருக்கு தென்கொரிய அரசு பல தடைகள் விதிப்பு



தென்கொரிய அதிபராக மூன் ஜே இன் பதவியில் இருந்த காலத்தில் வட கொரியாவுடன் நட்புறவு பேணி வந்தார். பின்னர் கடந்த ஆண்டு தென்கொரிய அதிபராக யூன் சக் இயோல் பதவியேற்ற பின், வடகொரியாவை எதிர்க்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை அந்த நாட்டின் அரசு மேற்கொண்டு வருகிறது.

தென்கொரியாவும் வடகொரியாவும் தொடர்ந்து மோதல் போக்கைக் கடைப்பிடித்து வருகின்ற நிலையில், இதுவரை வடகொரியாவைச் சேர்ந்த 40 க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் மீது பொருளாதார தென்கொரியா தடை விதித்துள்ளது. வட கொரியாவின் அச்சுறுத்தலைச் சமாளிக்க இவை மேற்கொள்ளப்படுகிறது என்று தென்கொரியா சொல்கிறது.

இந்த நிலையில், சோய் சோன் கோன் என்பவர் மீதும் தென்கொரிய அரசு தடைகளை அறிவித்துள்ளது. அவர் தென்கொரியாவை விட்டு வெளியேறி ரஷ்ய நாட்டின் குடியுரிமை பெற்றவர். அங்கேயே நிறுவனம் ஒன்றைத் தொடங்கி, ரஷ்யாவின் ஆயுதங்களை வடகொரிய ராணுவத்துக்கு விநியோகம் செய்து வருவதாக அவர் மீது புகார்கள் எழுந்தன. மேலும் வடகொரியாவுக்கு நிதி திரட்டுவதாகவும் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன. அதன்பேரில், சோய் சோன் கோன் மீதும் அவர் நிறுவனம் மீதும் தடை விதித்து தென்கொரிய அரசு உத்தரவிட்டுள்ளது.

## சமூக வலைத்தளப் பிரபலங்கள், யூ டியூபர்கள் வருமானவரி கட்டாது ஏய்ப்பதாக குற்றச்சாட்டு




வரி ஏய்ப்பில் ஈடுபட்டதாக சமூக வலைத்தள பிரபலங்கள் மற்றும் யூ டியூப் பிரபலங்களுக்கு எதிராக இந்திய வருமானவரித்துறை விசாரணையைத் தொடங்கி உள்ளது.

இந்தியாவில் சமூக வலைத்தள பிரபலங்கள் மற்றும் யூ டியூப், இன்ஸ்டாகிராமில் படைப்புகளை உருவாக்கி வெளியிடுபவர்கள் கணிசமாகச் சம்பாதிப்பதாகவும், ஆனால் அந்த வருமானத்தை வருமான கணக்கில் காண்பிக்காமலோ அல்லது குறைத்து காண்பித்தோ வரி ஏய்ப்பில் ஈடுபட்டு வருவதாகவும் வருமான வரித்துறைக்கு தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து, அத்தகைய பிரபலங்களுக்கு எதிராக வருமானவரித்துறை விசாரணையை தொடங்கி இருக்கிறது.

யூ டியூப் மற்றும் இன்ஸ்டாகிராமில், சில பிரபலங்கள் தங்கள் படைப்புகள் மூலம் கணிசமாக சம்பாதிக்கிறார்கள். வர்த்தக பொருட்களுக்கு ஆதரவாக விளம்பரம் செய்வதன் மூலமும் வருவாய் ஈட்டுகிறார்கள். ஆனால், இவற்றை வருமானவரி கணக்கில் காட்டுவது இல்லை. வர்த்தகம் மற்றும் தொழில் மூலம் 20 ஆயிரத்துக்கு மேல், வருமானம் ஈட்டினால், வரி செலுத்த வேண்டும் என்று கடந்த ஆண்டு பட்ஜெட்டில் புதிய விதிமுறை கொண்டுவரப்பட்டுள்ளது. எனவே, அந்த பிரபலங்களுக்கு எதிராக விசாரணை தொடங்கப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக, கேரளாவில், 10 யூ டியூப் மற்றும் சமூக வலைத்தள பிரபலங்களின் வீடுகளில் கடந்த வாரம் சோதனை நடத்தப்பட்டது. அவர்கள் நாகரிகமாக நடத்தப்பட்டனர். அவர்களின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இவர்களில் நடிகர்களும் அடங்குவர். இதுபோல், நாட்டின் மற்ற பகுதிகளில் உள்ள பிரபலங்களும் விசாரணை வளையத்தில் கொண்டுவரப்பட்டுள்ளனர். முதலில் நோட்டீஸ் அனுப்பி, முறையாக விசாரணை நடக்கிறது. மேலும், சில முன்னணி பிரபலங்களின் சமூக வலைத்தள செயல்பாடுகளை வருமானவரித்துறை கண்காணித்து வருகிறது, என்று வருமான வரித்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.




# பிரான்ஸ் போராட்டத்தில் வன்முறை வெடித்தது 170 அதிகாரிகள் காயம் – 40,000 பொலிசார் குவிப்பு



பிரான்ஸ் நாட்டின் பரிஸ் நகருக்கு உட்பட்ட நான்டர் புறநகரில் போக்குவரத்து நிறுத்தப் பகுதியில் விதிமீறி செயல்பட்டார் என்பதற்காக நீல் என்ற 17 வயதுச் சிறுவன் மீது பொலிசார் துப்பாக்கிச் சூடு நடத்தியிருந்தனர். இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த அந்த சிறுவன் உயிரிழந்து விட்டான். இது பற்றித் தெரிந்ததும், மக்களிடையே கடும் கொந்தளிப்பு எழுந்தது. பிரான்ஸ் முழுவதும் பல இடங்களில் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

நேற்றிரவும் பரிசின் புறநகர்ப் பகுதிகளில் மக்கள் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். சிறுவன் சுட்டு கொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு திரைப் பிரபலங்கள் மற்றும் அரசியல்வாதிகள் சிலரும் வருத்தமும், கண்டனமும் தெரிவித்தனர்.

இதுபற்றி அந்த நாட்டு உள்துறை அமைச்சர் ஜெரால்ட் டார்மனின் வெளியிட்ட டுவிட்டர் செய்தியில், போராட்டம் வன்முறையாக மாறியதில், பாடசாலைகள் மற்றும் காவல் நிலையங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டும், தாக்கப்பட்டும் உள்ளன என கூறியுள்ளார்.

பிரான்ஸ் அதிபர் மக்ரோன், அமைச்சர்கள் மட்டத்திலான நெருக்கடிப் பிரிவினர் கலந்து கொண்ட கூட்டத்தில் தலைமையேற்று ஆலோசனை மேற்கொண்டார். அதில், வன்முறையை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் பற்றி ஆலோசிக்கப்பட்டன. இதன்பின்னர் அவர், மக்கள் அமைதி காக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார். பாடசாலைகள், காவல் நிலையங்கள், குடியரசுக்கு எதிரான வன்முறையை நியாயப்படுத்த முடியாது என்றும் அவர் கூறினார். அமைதியை திரும்ப கொண்டு வர பணியாற்றியவர்களுக்கு தனது நன்றியையும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

போராட்டத்திற்கான உரிமையை நாங்கள் எப்போதும் பாதுகாத்திருக்கிறோம். ஆனால், நல்லிணக்கம் மற்றும் கூட்டு நல்லெண்ணம் ஆகியவை அதிக தேவையாக உள்ளன, என்று அதிபர் மக்ரோன் கூறியுள்ளார்.

பரிசில் நேற்றிரவு வன்முறை வேகமாகப் பரவியதில், 170 காவல் துறை அதிகாரிகள் காயம் அடைந்துள்ளனர் எனவும், போராட்டத்தில் ஈடுபட்ட 180 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், வன்முறை பரவாமல் கட்டுப்படுத்தும் நோக்கில் 40 ஆயிரம் பொலிசார் பணியில் ஈடுபடுத்தப்படுவதாகவும் பிரான்ஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# டைட்டன் நீர்மூழ்கியின் சிதைவுகளுடன் மனித உடல் பாகங்களும் மீட்கப்பட்டன

1912 ஆம் ஆண்டு வடக்கு அட்லாண்டிக் கடலில் 'டைட்டானிக்' கப்பல் விபத்துக்குள்ளாகி மூழ்கியது. அதன் சிதைந்த பாகங்களை பார்க்கும் ஆர்வத்தில், 5 செல்வந்தர்கள் கடந்த 18 ஆம் திகதி ஆழ்கடல் பயணம் மேற்கொண்டனர். ஓஷன்கேட் எக்ஸ்பெடிஷன்ஸ் நிறுவனம் வடிவமைத்த 'டைட்டன்' நீர்மூழ்கியில் அவர்கள் பயணித்தனர். அவர்களைப் பற்றி 4 நாட்களாக எந்த தகவலும் கிடைக்கவில்லை.

டைட்டானிக் கப்பல் அருகே அந்த நீர்மூழ்கி வெடித்துச் சிதறி 5 பேரும் பலியாகி விட்டதாக அதிகாரிகள் 22 ஆம் திகதி அறிவித்தனர். இச்சம்பவம் உலகம் முழுவதும் சோகத்தை ஏற்படுத்தியது. அதைத்தொடர்ந்து, 'டைட்டன்' நீர்மூழ்கி எப்படி வெடித்து சிதறியது என்பது தொடர்பான ஆராய்ச்சியில் அமெரிக்கா மற்றும் கனடா அரசு அமைப்புகள் ஈடுபட்டுள்ளன.

அமெரிக்க கடலோர காவல்படை, நீர்மூழ்கியின் சிதைந்த பகுதிகளை மீட்கும் பணியில் இறங்கியது. இந்நிலையில், நீர்மூழ்கியின் உடைந்த பாகங்கள், ஆழ்கடலில் மூவாயிரத்து 810 மீற்றர் ஆழத்தில் கண்டுபிடிக்கப்பட்டு மீட்கப்பட்டதாக அமெரிக்க கடலோர காவல்படை கூறியுள்ளது. அந்த இடம்,



டைட்டானிக் கப்பலின் உடைந்த பாகங்கள் இருக்கும் இடத்தில் இருந்து 488 மீற்றர் தூரத்தில் உள்ளது.

கனடாவில் ஆய்வு நீர்மூழ்கியின் உடைந்த பாகங்களுடன், மனித உடல் பாகங்கள் எனக் கருதப்படும் பொருட்களும் மீட்கப்பட்டு இருப்பதாக கடலோர காவல்படை கூறியுள்ளது. இது, நீர்மூழ்கி பற்றிய விசாரணையில் முக்கிய திருப்பத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

மீட்கப்பட்ட பாகங்கள், கனடா நாட்டின் நியூபவுண்ட்லேண்ட் மாகாணத்தில் உள்ள செயின்ட் ஜான்ஸ் துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டன. அவற்றை கனடாவில் உள்ள மருத்துவ நிபுணர்கள் ஆய்வு செய்து வருகிறார்கள். சர்வதேச விசாரணை அமைப்புகளுடன் ஆலோசனை நடத்திய பிறகு, அந்த பாகங்கள் அமெரிக்காவுக்கு கொண்டு வந்து தீவிர ஆய்வுக்கு உட்படுத்தப்படும் என்று அமெரிக்க கடலோர காவல் படை கூறியுள்ளது.

'டைட்டன்' நீர்மூழ்கி எப்படி வெடித்தது? இதுபோன்ற விபத்துகளை தவிர்ப்பது எப்படி? என்பதை அறிய இந்த பாகங்கள் உதவும் என்று கடலோர காவல்படை தலைவர் ஜேசன் நியுபேயர் தெரிவித்தார். மேலும், மனித உடல் பாகங்களாக கருதப்படுபவை, பலியான 5 பேரின் உடல் பாகங்களா என்றும் தெரிய வரும் என்றும் எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தமிழ்த்தேசியம் பேசும் அரசியல்வாதிகள் சந்தர்ப்பவாதத்தைக் கைவிடவேண்டும்!

## ஜனநாயகப் போராளிகள் கட்சியின் இ.கதிர்




தமிழ் இனம் தற்போது எந்தவித அடிப்படை உரிமைகளும் இல்லாது எந்தவித அதிகாரமும் இல்லாது நிலையற்ற தன்மையில் வாழ்ந்துகொண்டிருக்கின்றது, என ஜனநாயகப் போராளிகள் கட்சியின் செயலாளர் இ.கதிர் இன்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின்போது இனப்படுகொலை இடம்பெற்றது என்பது தொடர்பில் பிரித்தானியாவிலும் பிரேரணைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

அது தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்பட்டு பிரித்தானிய நாடாளுமன்றிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அவர் தெரி வித்துள்ளார்.

அண்மையில் இந்தி யாவின் ஆளும் கட் சியான பாரதிய ஜனதா கட்சியின் தமிழ கத் தலைவர் அண்ணாமலை, பிரித்தானியா சென்று தமிழ் புலம்பெயர் அமைப்புக்களை சந்தித்து கலந்துரையாடியதோடு, தமி ழருக்கான சம உரிமையை வென்றெடுப்ப தற்கு 13 ஆம் திருத்தமே ஒரே வழி என தெரிவித்திருந்தார். அதனை புலம்பெயர் அமைப்புக்களும் ஏற்றுக்கொண்டுள்ளன, என கதிர் குறிப்பிட்டுள்ளார்.

ஆயுதப்போராட்டக்காலத்தில்தமக்கான ஒரு கட்டமைப்பு இருந்ததாகவும் அதன் வழியே தாம் அரசில் செயற்பாடுகளை முன்னெடுத்ததாகவும், தற்போது அந்தக் கட்டுமானம் இல்லாத காரணத்தினால் அடிப்படை உரிமைகளை வென்றெடுப்பதற்கு 13ஆம் திருத்தச் சட்டத்தை ஒரு கட்டுமானமாக்கொண்டு, தொடர்ச்சியான எமது தீர்வை நோக்கி நகர வேண்டும் என, அவர் தெரிவித்துள்ளார்.

ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்ட தன் பின்னர் தமிழர்கள், நாட்டின் ஆட்சியாளர்களால் பல்வேறு வகையிலும் அடிமைப்படுத்தப்பட்டு அடிப்படை உரிமைகள் இல்லாமல் செய்யப்பட்டு, தமிழின இருப்பையே இல்லாது செய்யும் முயற்சியே முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறான நிலையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழர்கள் தொடர்பில் முன்னெடுத்த சில விடயங்கள் தமிழர்களுக்கு நன்மை பயப்பதாக அமைந்துள்ளன. அதற்கு நாம் அவருக்கு நன்றி தெரிவிக்க வேண்டும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசியம் பேசும் சில அரசியல்வாதிகள் 13ஆம் திருத்தத்தை ஏற்க முடியாது எனவும், இந்தியாவின் செயற்பாடுகளுக்கு எதிராக கருத்து வெளியிட்டும் வருகின்றனர்.

இவ்வாறானவர்கள் மக்களை ஏமாற்றி தொடர்ந்தும் சந்தர்ப்பவாத அரசியலில் ஈடுபட்டு. தங்களின் ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைப்பதற்குப் பதிலாக மக்களுக்கான நேர்மையான அரசியலைக் கொண்டு போவதற்காகச் செயலாற்ற வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## மைத்திரிபால கலந்துகொண்ட நிகழ்வில் காலாவதியான குளிர்பானப் போத்தல்கள்

யாழ்.உடுப்பிட்டி - மகளிர் கல்லூரியில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டிருந்த நிகழ்வுக்காக கொள்வனவு செய்யப்பட்ட குளிர்பானப் போத்தல்கள் காலாவதியானமை பாதுகாப்பு அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

உடுப்பிட்டி - மகளிர் கல்லூரியில் விளையாட்டு மைதானம் ஒன்றுக்கான நிதி உதவி வழங்கலை ஒட்டிய நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்டுள்ளார்.

இந்த நிகழ்வில் பங்கேற்றவர்களுக்காக ஒழுங்கமைக்கப்பட்ட தேனீர் விருந்துக்காக உடுப்பிட்டியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் 4 குளிர்பானப் போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. இதனை பாதுகாப்பு பிரிவினர் பரிசோதித்தபோது அது காலாவதியாகியிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மைய மாதங்களில் யாழ் குடாநாட்டில் காலாவதியான, காலாவதித் திகதி அழித்து மாற்றப்பட்ட மென்பானப் போத்தல்கள் கண்டுபிடிக்கப்படும் நிகழ்வுகள் அதிகரித்துள்ளமை அவதானத்துக்குரியது.

# யாழ்ப்பாணம்– கொழும்பு சொகுசு பஸ் மதுரங்குளியில் தீப்பிடித்து எரிந்தது!



புத்தளம் – மதுரங்குளி செம்பட்டை பகுதியில் இன்று அதிகாலை 3.30 அளவில் இடம்பெற்ற தீ விபத்தில் சொகுசு பஸ் ஒன்று முழுமையாக எரிந்து நாசமாகியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி 43 பயணிகளுடன் சென்றுகொண்டிருந்த அதிசொகுசு பஸ் ஒன்றே இவ்வாறு தீக்கிரையாகியுள்ளது.

குறித்த தீயை மதுரங்குளி பொலிஸாருடன் இணைந்து புத்தளம் நகர சபை தீயணைக்கும் பிரிவினரும், இலங்கை விமானப் படையின் பாலாவி முகாமைச் சேர்ந்த விமானப் படையினரும், பொதுமக்களும் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயற்சிகளை மேற்கொண்ட போதிலும் குறித்த பஸ் முழுமையாக எரிந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

எனினும், இந்த தீ விபத்தில் பயணம் செய்த பயணிகள் எவருக்கும் உயிர்ச் சேதங்களோ, காயங்களோ ஏற்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது, பஸ்ஸில் சென்ற பயணிகள் அனைவரும் பாதுகாப்பாக மீட்கப்பட்டு மற்றுமொரு பஸ்ஸில் கொழும்பு நோக்கி அனுப்பி வைக்கப்பட்டனர்.

குறித்த பஸ்ஸின் இயந்திரத்தில் ஏற்பட்ட கோளாறே இந்த விபத்துக்கான காரணம் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# தெஹிவளை மிருகக்காட்சி சாலையை இலவசமாகப் பார்வையிட சந்தர்ப்பம்




தேசிய விலங்கியல் திணைக்களத்தின் எண்பத்தேழாவது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் எதிர்வரும் ஜுலை 3 ஆம் திகதி 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு. தெஹிவளை மிருகக்காட்சிசாலையை இலவசமாக பார்வையிடக்கூடிய வாய்ப்பு வழங்கப்படும், என தேசிய விலங்கியல் பூங்காவின் பணிப்பாளர் நாயகம் திலக் பிரேமகாந்த தெரிவித்துள்ளார்.

இந்தத் தினத்தன்று, பார்வையாளர்களுக்கு விலங்குகளின் பாதுகாப்பு மற்றும் அவற்றின் வாழ்க்கை சூழல் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்படுவதோடு, .

குழந்தைகளின் அறிவைப் வளர்ப்பதற்கான பல திட்டங்கள் பகலில் செயல்படுத்தப்பட உள்ளன.

அன்றைய நிகழ்வுகளுக்கு ஏற்ப, மிருகக்காட்சிசாலையின் சிங்க அடைப்பும் பொதுமக்களுக்கு திறக்கப்படும்.

திருத்தப்பணிகளுக்காக, சிங்க கூண்டுகள் நீண்ட காலமாக மூடப்பட்டு, சிங்கங்கள் தனி இடத்தில் வைக்கப்பட்டன. சிங்கங்களின் கூண்டுகளைச் சரிசெய்த பிறகு, சிங்கங்கள் வாழ புதிய இடம் கிடைக்கும் எனவும் மேலும் அப்பகுதி பொதுமக்களின் பார்வைக்காக திறக்கப்படும் என என்று பிரேமகாந்த கூறினார்.

# புதிய விமானப்படைத் தளபதி கடமைகளை பொறுப்பேற்றார்



புதிய விமானப் படைத்தளபதியாக நியமிக்கப்பட்ட எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ச இன்று தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொண்டார்.

எயார்மார்ஷல் உதேனி ராஜபக்ச இலங்கையின் 19 வது விமானப்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு ஆனந்த கல்லூரியின் முன்னாள் மாணவரான இவர், அந்தப் பாடசாலையிலிருந்து பதவியேற்கும் முதலாவது விமானப்படைத் தளபதியாவார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.06.2023இல் வெளியிடப்பெற்றது.